Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous **Case No. CC. 18/2024**
Preliminary Register
Deposition of **PW- 4 LW-3**

| Name | : | நேதாஜி | Father Name | : | கணேசன் |
|---|---|---|---|---|---|
| Village | : | மருதாநல்லூர் | Taluk | : | கும்பகோணம் |
| Caste | : | | Calling | : | லாரி கிளீனர் |
| Religion | : | | Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of October 2025.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து லாரி கிளீனராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. இன்றிலிருந்து சுமார் 1 வருடத்திற்கு முன்பு நானும் எனது நண்பர் பிரபாகரன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் பிரபாகரன் வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து இரவு 11 மணியளவில் நீடாமங்களத்திலிருந்து எங்களது வீட்டிற்கு செல்வதற்காக நார்த்தாங்குடி அருகே வந்துகொண்டிருந்தபோது 'டமார்' என்று சத்தம் கேட்டது. சென்று பார்த்தபோது பைக்கில் வந்த 3 நபர்கள் கீழே கிடந்தார்கள். அவர்களை இடித்த லாரி அங்கிருந்து நிற்காமல் சென்றுவிட்டது. சத்தம் கேட்டு ஊர் மக்களும் வந்து விட்டார்கள். கீழே விழுந்தவர்களில் 2 நபர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள். அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம்

இறந்தவர்களையும் காயம் பட்டவர்களையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது குறித்து மறுநாள் வலங்கைமான் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.27 18:23:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 18/2024**

Preliminary Register

Deposition of **PW- 5 LW-11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மணிகண்டன் | Father Name | : | ரவி |
| Village | : | பூதங்குடி | Taluk | : | நாகப்பட்டிணம் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of October 2025.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரையானவர்களை தெரியும். விபத்தில் இறந்துபோன கோபிநாத் எனது தம்பி ஆவார். விபத்தில் இறந்துபோன சத்தியராஜ் மற்றும் விபத்தில் காயம்பட்ட மணிகண்டன் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 01.07.2024ம் தேதி இரவு 09.00 மணிக்கு மூவரும் TN 51 AQ 6041 என்ற பதிவெண் கொண்ட காயம்பட்ட மணிகண்டனுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் கொத்தனார் வேலைக்காக தஞ்சாவூர் செல்லும்போது நார்த்தாங்குடி பைபாஸ் அருகே சென்றபோது திருவாரூரிலிருந்து தஞ்சாவூர் நோக்கி சென்ற லாரி மேற்கண்ட இருசக்கர வாகனத்தில் சென்றவர்கள் மீது மோதியதில் மூவரும்

இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து விட்டனர். அதில் எனது தம்பி கோபிநாத் மற்றும் சத்தியராஜ் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டனர். விபத்தில் காயம்பட்ட மணிகண்டன் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். கடந்த 03.07.2024ம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சவக்கிடங்கின் முன்பு இறந்துபோன எனது தம்பி கோபிநாத் மற்றும் சத்தியராஜ் ஆகியோர்களின் பிரேதத்தின் மீது போலீசார் என் முன்னிலையிலும் எனது உறவினர்கள் முன்னிலையிலும் பிரேத விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.27 18:23:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 18/2024**

Preliminary Register

Deposition of **PW- 6 LW -12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சேகர் | Father Name | : | ராஜேந்திரன் |
| Village | : | பூதங்குடி | Taluk | : | நாகப்பட்டிணம் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of October 2025.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரையானவர்களை தெரியும். விபத்தில் இறந்துபோன கோபிநாத் எனது மாமா மகன் ஆவார். விபத்தில் இறந்துபோன சத்தியராஜ் மற்றும் விபத்தில் காயம்பட்ட மணிகண்டன் ஆகியோர்களை தெரியும். கடந்த 01.07.2024ம் தேதி இரவு 8, 9 மணியளவில் மூவரும் TN 51 AQ 6041 என்ற பதிவெண் கொண்ட காயம்பட்ட மணிகண்டனுக்கு சொந்தமான Pulsar இருசக்கர வாகனத்தில் கொத்தனார் வேலைக்காக தஞ்சாவூர் செல்லும்போது நார்த்தாங்குடி பைபாஸ் அருகே சென்றபோது திருவாரூரிலிருந்து தஞ்சாவூர் நோக்கி சென்ற லாரி மேற்கண்ட இருசக்கர வாகனத்தில் சென்றவர்கள் மீது மோதியதில் மூவரும் இருசக்கர

வாகனத்திலிருந்து கீழே விழுந்து விட்டனர். அதில் எனது மாமா மகன் கோபிநாத் மற்றும் சத்தியராஜ் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டனர். விபத்தில் காயம்பட்ட மணிகண்டன் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். கடந்த 03.07.2024ம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சவக்கிடங்கின் முன்பு இறந்துபோன எனது மாமா மகன் கோபிநாத் மற்றும் இறந்துபோன சத்தியராஜ் ஆகியோர்களின் பிரேதத்தின் மீது போலீசார் என் முன்னிலையிலும் எனது உறவினர்கள் முன்னிலையிலும் பிரேத விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.27 18:23:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 18/2024**

Preliminary Register

Deposition of **PW- 7 LW - 13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆனந்தன் | Father Name | : | சின்னபிள்ளை |
| Village | : | பூதங்குடி | Taluk | : | நாகப்பட்டிணம் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of October 2025.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயக் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரையானவர்களை தெரியும். விபத்தில் இறந்துபோன கோபிநாத் எனது அண்ணன் மகன் ஆவார். விபத்தில் இறந்துபோன சத்தியராஜ் மற்றும் விபத்தில் காயம்பட்ட மணிகண்டன் ஆகியோர்களை தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். கடந்த 01.07.2024ம் தேதி இரவு 8, 9 மணியளவில் மூவரும் TN 51 AQ 6041 என்ற பதிவெண் கொண்ட காயம்பட்ட மணிகண்டனுக்கு சொந்தமான Pulsar இருசக்கர வாகனத்தில் கொத்தனார் வேலைக்காக தஞ்சாவூர் செல்லும்போது நீடாமங்களம் அருகே சென்றபோது திருவாரூரிலிருந்து தஞ்சாவூர் நோக்கி சென்ற லாரி மேற்கண்ட இருசக்கர வாகனத்தில் சென்றவர்கள் மீது

மோதியதில் மூவரும் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து விட்டனர். அதில் எனது அண்ணன் மகன் கோபிநாத் மற்றும் சத்தியராஜ் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டனர். விபத்தில் காயம்பட்ட மணிகண்டன் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். கடந்த 03.07.2024ம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சவக்கிடங்கின் முன்பு இறந்துபோன எனது அண்ணன் மகன் கோபிநாத் மற்றும் இறந்துபோன சத்தியராஜ் ஆகியோர்களின் பிரேதத்தின் மீது போலீசார் என் முன்னிலையிலும் எனது உறவினர்கள் முன்னிலையிலும் பிரேத விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.27 18:23:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.